நோயாளி தகவல் கையேடு

# குளோர்ஹெக்ஸிடைன் வாய்க் கழுவி

(CHLORHEXIDINE MOUTHWASH)



MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — Adding years of healthy life
NUH National University Hospital — A member of the NUHS
Alexandra Health
EASTERN HEALTH ALLIANCE
JurongHealth
SingHealth

SINGHEALTH / PIL / T87R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

குளோர்ஹெக்ஸிடைன் (Chlorhexidine) பாக்டீரியா நுண்ணுயிர்களை எதிர்க்கக்கூடிய ஒரு மருந்தாகும். இது பற்களில் காரை படிவதைத் தடுக்கிறது. ஈறு அழற்சி (ஈறு வீக்கம்), வாய்ப் புண் மற்றும் வாயில் ஏற்படும் சாதாரண கிருமித்தொற்றுகளுக்குச் சிகிச்சை அளிக்கவும் அவற்றைத் தடுக்கவும் இது பயன்படுகிறது. இம்மருந்தை வழக்கமாக உபயோகித்து வந்தால், வாய்ச் சுகாதாரம் மேம்பட்டு, சுவாசம் சுத்தமாகவும் நறுமணத்துடனும் இருக்கும்.

## இந்த மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவையும், எத்தனை முறை பயன்படுத்த வேண்டும் என்பதையும் மருத்துவர் கூறுவார். பற்களைத் துலக்கி பல்நார் பயன்படுத்திய பிறகு இந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டும்.

- மருந்துக் கரைசலை 10 – 15 மில்லிலிட்டர் அளந்து கொள்ளுங்கள்.
- குறைந்தது 30 வினாடிகளுக்கு கரைசலை வாயில் சுழற்றிக் கொப்பளியுங்கள்.
- மருந்தை விழுங்காதீர்கள், வாயைக் கழுவியதும் அதைத் துப்பிவிடுங்கள்.
- இந்த மருந்தை வழக்கமாக ஒரு நாளில் இரண்டு முறை பயன்படுத்த வேண்டும்.
- மருந்தைத் தண்ணீரில் அல்லது வேறு திரவங்களோடு கலக்காதீர்கள்.

மருந்தைப் பயன்படுத்திய பிறகு, அடுத்த சில மணி நேரத்திற்கு (சுமார் 2-3 மணி நேரம்) உணவு உண்ணாதீர்கள் அல்லது பானம் அருந்தாதீர்கள்.

## மருந்தைப் பயன்படுத்த **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தைத் தவறவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே பயன்படுத்துங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் பயன்படுத்தத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை மருந்தை மட்டும் பயன்படுத்துங்கள். முதலில் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு பயன்படுத்தாதீர்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

- வாய் மற்றும் நாக்கு எரிதல் (இது இருந்தால், மருந்தை அதே அளவு தண்ணீரில் கலந்து கொப்பளியுங்கள்).
- வாய் கசத்தல்.
- நாக்கு, பற்கள், பல் அடைப்புகள், மற்றும் பொய்ப் பற்கள் கறையாகுதல் (பற்களை நாள்தோறும் துலக்கினால் இதைத் தடுக்கலாம்)
- பல மணி நேரத்திற்கு நாக்கில் சுவை உணர்வு மழுங்குதல்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

- நீங்கள் கர்ப்பமாக இருந்தால் அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால் மருத்துவரிடம் மறக்காமல் தெரிவியுங்கள்.
- மருத்துவர் கூறும் காலத்திற்கு மேல் இந்த மருந்தைப் பயன்படுத்தாதீர்கள்.
- இம்மருந்தினால் பற்கள் மஞ்சள்-பழுப்பு நிறமாகலாம். இது வழக்கமானதே. பல் மருத்துவரிடம் சென்று இதை நீக்கிக் கொள்ளலாம்.
- மருந்தை விழுங்கக் கூடாது.
- குளோர்ஹெக்ஸிடைன் உங்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் முன்னமே அறிந்திருந்தால் இம்மருந்தைப் பயன்படுத்தாதீர்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பம் மற்றும் நேரடி வெளிச்சம் படாமல் வைத்திருங்கள்.